# <u>பத்திரிக்கைச் செய்தி</u>

தமிழ்நாடு அரசு, குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை மிசன் வத்சால்யா குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகில் கீழ்கண்ட பட்டியலில் உள்ள பணியிடத்தினை முற்றிலும் தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம் செய்திட புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

| வ. எண் | பதவியின் பெயர் | பதவியின் எண்ணிக்கை | ஒப்பந்த ஊதியம் மாதத்திற்கு |
|---|---|---|---|
| 01. | தகவல் பகுப்பாளர் (Data Analyst) | 1 | ரூ.18,536/- |

**<u>தகவல் பகுப்பாளர் (Data Analyst) பணிக்கான கல்வித்தகுதி மற்றும் பணி முன் அனுபவ விபரம்</u>**

- புள்ளியியல்/கணிதம்/பொருளாதாரம்/கணினி அறிவியல்/ ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றில் இளங்கலை பட்டம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தில் பெற்றிருக்க வேண்டும்.
- பணி முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.
- கணினியில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
- 42 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும்

மேற்குறிப்பிட்ட தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் https://pudukkottai.nic.in/ என்ற இணையதள முகவரியில் விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பபடிவத்தினை அனைத்து கல்வி சான்றிதழ்களின் நகல்களுடன் இணைத்து நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ 30.09.2026 அன்று மாலை 5.30 மணிக்குள் கீழ்கண்ட முகவரிக்கு கிடைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. காலதாமதமாக பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என தெரிவிக்கப்படுகிறது.

**<u>விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:</u>**

**மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்,**
**மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம்,**
**மாவட்ட முன்னாள் படைவீரர்கள் நல அலுவலக வளாகம்,**
**கல்யாணராமபுரம் 1-ஆம் வீதி,**
**திருக்கோகர்ணம் அஞ்சல்,**
**புதுக்கோட்டை - 622002.**
**தொலைபேசி எண்: 04322-221266**

**மாவட்ட ஆட்சித்தலைவர்**
**புதுக்கோட்டை.**